# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 65/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 4**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : சரவணன் | | Caste | : |
| Father/Husband Name | : வீரத்தேவர் | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Accused absent. Petition field and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.05.2024**

**முதல் விசாரணை**

நான் செல்லம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 13.02.2017 ஆம் தேதியில் இரவு 09.00 மணியளவில் செக்கானூரணி போலீசார் விபத்து நடந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் ஜெயராமன் என்பவரும் கையெழுத்து போட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 65/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 3**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஜெயராமன் | | Caste | : |
| Father/Husband Name | : பரமன் | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Accused absent. Petition field and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.05.2024**

**முதல் விசாரணை**

நான் செல்லம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 13.12.2017 ஆம் தேதியில் இரவு 09.00 மணியளவில் செக்கானூரணி போலீசார் விபத்து நடந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் சரவணன் என்பவரும் கையெழுத்து போட்டார். அந்த பார்வை மகசர் (**அ.சா.ஆ. 2**) ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 65/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரமேஷ் | Caste | : | |
| Father/Husband Name | : | விஜயராமன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused absent. Petition field and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.05.2024**

**முதல் விசாரணை**

நான் செல்லம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். விபத்து இறந்துபோன நபர் எனது தகப்பனார் ஆவார். 07.02.2017 ஆம் தேதியில் இரவு 07.30 மணியளவில் செல்லம்பட்டியில் விஷேச வீட்டிற்கு சென்றுவிட்டு நானும், எனது நண்பர் மாசிராஜாவும் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தோம். எனது அப்பாவும், அம்மாவும் எங்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது செல்லம்பட்டி, பட்டத்து அரசியம்மன் கோவில் பின்புறம் கிழக்கு தெரு வாசலில் அருகே தேனி - மதுரை ரோட்டில் சாலையில் எனது அப்பா மற்றும் அம்மா பின்னால் அதிவேகமாக வந்த Splendor இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் எனது அப்பா மீது மோதிவிட்டார். பின்னர் விசாரித்ததில் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் பூசைமணி என்று தெரிந்துகொண்டோம். விபத்து நடந்தபோது பூசைமணியை பார்த்தோம். அவர் நீதிமன்றத்திற்கு வந்தால் அடையாளம் காட்டுவேன். பின்னர் ஆம்புலன்சு மூலம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சை பெற்று மதுரை

ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது தகப்பனாரை சேர்த்தோம். பின்னர் சிகிச்சை பலனின்றி 13.02.2017 ஆம் தேதியில் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 65/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்லம்மாள் | Caste | : |
| Father/Husband Name | : விஜயராமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused absent. Petition field and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.05.2024**

**முதல் விசாரணை**

நான் செல்லம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விபத்து இறந்துபோன நபர் எனது கணவர். 07.02.2017 ஆம் தேதியில் இரவு 07.30 மணியளவில் செல்லம்பட்டியில் விஷேச வீட்டிற்கு சென்றுவிட்டு நானும், எனது கணவர் விஜயராமனும் செல்லம்பட்டி, பட்டத்து அரசியம்மன் கோவில் அருகே தேனி - மதுரை ரோட்டில் நடந்து வந்து கொண்டிருந்தபோது, எங்களுக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் எனது கணவர் மிது மோதியது. அவருக்கு தலை மற்றும் கால் ஆகிய இடங்களில் அடிபட்டு இரத்தக்காயம் இருந்தது. மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் பூசமணி என்றும் பின்னர் கேட்டு தெரிந்துகொண்டேன். மேற்படி விபத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் அடிபட்டு சற்று தூரத்தில் இருந்தார். நான் அவரை சரியாக பார்க்கவில்லை. பின்னர் ஆம்புலன்சு மூலம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சை பெற்று மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது கணவரை சேர்த்தோம். பின்னர் சிகிச்சை பலனின்றி 13.02.2017 ஆம் தேதியில் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக செக்கானூரணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

அந்த புகார் (**அ.சா.ஆ. 1**) ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**